# SRES- NFIR ன் தொடர் முயற்சிக்கு வெற்றி! 01.01.2016க்கு பிறகு பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பே ரீ பிக்ஸேஷன் செய்ய உத்தரவு!

- ஜனவரி 2 முதல் ஜுன் 30க்குள் பதவி உயர்வு / **MACP** பெற்றவர்கள் ஆப்ஷன் கொடுத்து ஜுலை 1 அன்று நார்மல் மற்றும் பே பிக்ஸேஷன் செய்து புரமோஷன் இன்கிரிமெண்ட் பெற்றவர்களுக்கு அடுத்த ஆண்டு ஜுலை 1ல் நார்மல் இன்கிரிமெண்ட் கொடுக்கப்பட்டது. இந்த புதிய உத்தரவின் அடிப்படையில் மேற்கூறியவைகளை பெற்று இனி வருடந்தோறும் ஜுலை 1க்கு பதிலாக முன்கூட்டியே ஜனவரி 1ல் நார்மல் இன்கிரிமெண்ட் வழங்கப்படும்.

- ஜுலை 1 அன்று பதவி உயர்வு பெற்றவர்களுக்கு நார்மல் மற்றும் பே பிக்ஸேஷன் செய்து புரமோஷன் இன்கிரிமெண்ட் கொடுத்த அடுத்த ஆண்டு ஜுலை 1ல் நார்மல் இன்கிரிமெண்ட் வழங்கப்படுகிறது. இதற்கு பதிலாக தற்பொழுது ஆப்ஷன் கொடுத்தால் மேற்கூறியவைகளை பெற்று இனி வருடந்தோறும் ஜுலை 1 க்கு பதிலாக முன்கூட்டியே ஜனவரி 1ல் இன்கிரிமெண்ட் வழங்கப்படும்.

- ஜுலை 2 முதல் டிசம்பர் 31க்குள் பதவி உயர்வு பெற்ற அந்த நாளிலே பே பிக்ஸேஷன் செய்து புரமோஷன் இன்கிரிமெண்ட்டும், அடுத்த ஆண்டு ஜுலை 1ல் நார்மல் இன்கிரிமெண்ட்டும் பெற்றவர்கள், தற்போது ஆப்ஷன் கொடுத்தால் அடுத்த ஆண்டு ஜுலை 1ல் நார்மல் இன்கிரிமெண்ட்டும், பே பிக்ஸேஷன் செய்து புரமோஷன் இன்கிரிமெண்ட்டும், அதற்கடுத்த ஆண்டு முதல் தொடர்ந்து ஜனவரி 1ல் இன்கிரிமெண்ட் பெற்று பயன்பெறலாம். ஏற்கனவே வழங்கப்பட்ட புரமோஷன் இன்கிரிமெண்ட் **OP** ஆக பிடிக்கப்படும்.

- ஜனவரி 2 முதல் ஜுன் 30க்குள் பதவி உயர்வு பெற்ற நாளிலே பே பிக்ஸேஷன் செய்து புரமோஷன் இன்கிரிமெண்ட்டும், அடுத்த ஆண்டு ஜனவரி 1ல் நார்மல் இன்கிரிமெண்ட்டும் பெற்றவர்கள், தற்போது ஆப்ஷன் கொடுத்து ஜுலை 1ல் நார்மல் மற்றும் பே பிக்ஸேஷன் செய்து புரமோஷன் இன்கிரிமெண்ட்டும் பெற்றுக்கொண்டு வருடந்தோறும் இனி ஜனவரி1ல் நார்மல் இன்கிரிமெண்ட் பெற்று பயன்பெறலாம்.

01.01.2016க்கு பிறகு புரமோஷன்/**MACP** மூலம் இன்கிரிமெண்ட் பெற்றவர்களில், **சிலரிடம் ஆப்ஷன் பெறாமலே முன்கூட்டியே இன்கிரிமெண்ட்டும், சிலரிடம் ஆப்ஷன் பெற்று முன்கூட்டியே இன்கிரிமெண்ட்டும்** வழங்குவதற்கு **Rly. Bd.,** உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன் அடிப்படையில் ஆப்ஷன் ஒரு மாத காலத்திற்குள் கொடுக்க வேண்டியுள்ளதால் பதவி உயர்வு பெற்ற தொழிலாளர்களின் விவரம், அப்படி கொடுப்பவர்களுக்கு முன்கூட்டியே கிடைக்கும் **Pay Fixation** ஆகியவற்றை **நிர்வாகமே வெளியிட்டு இதற்கு ஒரு வெல்பர் இன்ஸ்பெக்டரை தனியாக நியமனம் செய்து சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து ஆப்ஷன் பார்மை பெற்று Pay Re-Fixation செய்து அரியர்ஸ் வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுத்திட நிர்வாகத்தை SRES-NFIR வலியுறுத்துகிறது.**

ஆதாரம் : **Rly.Bd., Lr. RBE No.212/2019 dt. 18.12.2019, CPO/S.Rly Lr. PBC No.308/2019 dt.07.01.2020**

குறிப்பு : **Rule 10 RS (RP) Rule 2016, FR 22(1)(a) (1)** படி பே ரீ பிக்ஸேஷன் செய்து இன்கிரிமெண்ட் பெற 1 மாதத்திற்குள் ஆப்ஷன் கொடுத்து பயன்பெற 31.7.2017ல் **Rly. Bd.,** பிறப்பித்த உத்தரவு காலம் போதாது என மீண்டும் தொடர்ந்து பேசி 20.9.18ல் 90 நாட்களுக்குள் வழங்க உத்தரவு பெற்றுத்தந்தபோதும் பலருக்கு இந்த பயன் சென்றடையவில்லை. மீண்டும் தொடர்ந்து பல கூட்டங்களில் பேசி ஒப்புக்கொள்ளவைத்து தற்பொழுது **1 மாத காலத்திற்குள் ஆப்ஷன் கொடுத்து பயன்பெற Rly. Bd.,** யிடமிருந்து புதிய உத்தரவு பெற்றுத்தந்த தலைவர் **Dr.M. இராகவைய்யாஜி** அவர்களுக்கு **மனமார்ந்த நன்றி!** மேற்கூறிய காலத்தில் பதவி உயர்வு பெற்றவர்கள் தங்களது புரமோஷன் மற்றும் பே பிக்ஸேஷன் ஆர்டர், சம்பள ரசீது ஆகியவற்றின் ஜெராக்ஸ் நகலோடு **SRES** சங்க நிர்வாகிகளை அணுகி பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**SRES** | **WORKSHOP DIVISION 25.01.2020** | **NFIR**